# 6 தொலைக்காட்சி



தொலைக்காட்சி தனைநாமும்
 தொலைவில் இருந்து பார்க்கணும்!
கலை அழகைக் கண்டுநாளும்
 கண்கள் குளிர ரசிக்கணும்!
நமக்கு மட்டும் கேட்குமளவு
 ஒலியைக் குறைத்து வைக்கணும்!
நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகளை
 நிறையப் பேர்க்குச் சொல்லணும்!

பறவை, மிருகம் வாழ்க்கையினைப்
பார்த்துப் பாடம் கற்கலாம்!
வயலும் வாழ்வும் வாழ்க்கையோடு
இணைந்து இருக்கக் காணலாம்!
உலக நடப்பை ஒருநொடியில்
வீட்டி லிருந்தே பார்க்கலாம்!
நமது அறிவைப் படிப்படியாய்
நாளும் இதனால் வளர்க்கலாம்!
பல மொழியில் திரைப்படங்கள்
பார்த்து நாமும் மகிழலாம்!
ஒருமைப் பாட்டைக் காக்கும் இது
உயர்வு மிக்க கருவிதான்!

- குழ. கதிரேசன்
'பாட்டுமழை'

## சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | கலை அழகு | - | කලාවේ ලස්සන |
| 2. | இரசிக்கணும் | - | රස විඳිය යුතුයි |
| 3. | ஒலி | - | ශබ්දය |
| 4. | நெஞ்சத்தைத் தொடும் | - | හිතට වදින |
| 5. | கற்கலாம் | - | ඉගෙනගන්න පුළුවන් |
| 6. | உலக நடப்பு | - | ලෝක විත්තිය |
| 7. | நொடி | - | තත්පරය |
| 8. | திரைப்படங்கள் | - | චිත්‍රපටි |
| 9. | ஒருமைப்பாடு | - | එකමුතුකම |
| 10. | காக்கும் | - | ආරක්ෂා කරයි/ රකියි |
| 11. | கருவி | - | උපකරණ |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

✶ பாடலை கருத்துவிளங்க வாசிப்போம்
**අර්ථය පැහැදිලි වන සේ ගීතය කියවමු.**

✶ பாடலை இசையுடன் பாடுவோம்.
**තාලයට ගයමු.**

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. தொலைக்காட்சியை எவ்வாறு நாம் பார்க்க வேண்டும்?
2. எவற்றின் வாழ்க்கையினைப் பார்த்து பாடம் கற்க முடியும்?
3. தொலைக்காட்சியால் நாம் பெறும் பயன்கள் மூன்றினை எழுதுங்கள்.
4. நீங்கள் விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இரண்டினை எழுதுங்கள்.
5. இக்கவிதையின் கருத்தை வாக்கியங்களில் (தமிழில்) எழுதுங்கள்.

### செயற்பாடு - I

**இடைவெளியை நிரப்புவோம்.**
**හිස්තැන් පුරවමු**

1. தொலைக் காட்சியைத் ................................ இருந்து பார்க்க வேண்டும்.
2. ................................ குளிர ரசிக்க வேண்டும்.
3. ஒலியை ......................... வைக்க வேண்டும்.
4. நல்ல நிகழ்ச்சிகளைப் பார்த்து ................................ சொல்ல வேண்டும்.
5. உலக நடப்பை ஒரு .............................. அறிய முடியும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - II

**பின்வரும் பேச்சு மொழிச் சொற்களுக்கான எழுத்து மொழிச் சொற்களை எழுதுவோம். පහත සඳහන් වචන ලිඛිත භාෂාවෙන් ලියමු.**

1. பார்க்கணும் - ------------------------------------
2. ரசிக்கணும் - ------------------------------------
3. வைக்கணும் - ------------------------------------
4. சொல்லணும் - ------------------------------------

## செயற்பாடு - III

**பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுவோம். පහත සඳහන් වචන යොදා වාක්‍ය ලියමු.**

1. ஒலி :- ------------------------------------
2. ஒளி :- ------------------------------------
3. வயல் :- ------------------------------------
4. வாழ்வு :- ------------------------------------
5. பறவை :- ------------------------------------
6. மிருகம் :- ------------------------------------

## செயற்பாடு - IV

**சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுவோம். සිංහල වචනවලට දෙමළ වචන ලියමු.**

1 දුර :- ------------------------------------
2 සීතල :- ------------------------------------
3 ගොඩක් :- ------------------------------------
4 දවස :- ------------------------------------
5 උසස් :- ------------------------------------



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - V

**பின்வரும் சிங்களச் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை தமிழில் எழுதுவோம்.**
**පහත සඳහන් සිංහල වචනවලට විරුද්ධ දෙමළ වචන ලියමු.**

1. අඩු - ....................................
2. පහත - ....................................
3. ළඟ/ආසන්න - ....................................
4. දිවා/දවල් - ....................................
5. තරුණයා - ....................................

**பின்வரும் தமிழ்ச் சொற்களின் சிங்கள எதிர்க்கருத்துச் சொற்களை இணைப்போம்.**
**පහත සඳහන් වචනවලට ගැළපෙන සිංහල විරුද්ධ වචන යා කරමු.**

| | | |
|---|---|---|
| 1. | முதியவர் | දුක |
| 2. | உண்டு | උත්තර |
| 3. | மகிழ்ச்சி | බහු |
| 4. | ஒருமை | නැත |
| 5. | கேள்வி | තරුණයා |

## செயற்பாடு - VI

**பின்வரும் உதாரணத்தைப் பின்பற்றிக் கீழே தரப்பட்ட சொற்களை எழுதுவோம். පහත සඳහන් උදාහරණ අනුව වචන ලියමු.**

உதாரணம் :- பார்க்கணும் - பார்க்கக் கூடாது

ரசிக்கணும் - ..........................
கேட்கணும் - ..........................
சொல்லணும் - ..........................
கற்கணும் - ..........................


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - VII

**‘‘அ’’ பகுதியிலுள்ள சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை ‘‘ஆ’’ பகுதியிலிருந்து தெரிவு செய்து இணைப்போம்.**
**“அ” කොටසට අයත් වචනවලට විරුද්ධ පද “ආ” කොටසෙන් යා කරමු**

| | ‘அ’ | ‘ஆ’ |
|---|---|---|
| 1. | மகிழ்ச்சி | தாழ்வு |
| 2. | நிறைய | சில |
| 3. | உயர்வு | பிரிதல் |
| 4. | இணைதல் | குறைய |
| 5. | பல | கவலை |

## விளம்பரம்

**கீழே தரப்பட்டுள்ள விளம்பரத்தை வாசியுங்கள்**

இதோ! வெளிவந்துவிட்டது.
புலமைப் பரீட்சை வழிகாட்டி

சுயமாகவே கற்றுப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற முடியும்.

அனுபவம் வாய்ந்த திறமையான ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டவை. பலவகை மாதிரிப் பயிற்சிகள், வழிகாட்டற் குறிப்புகள், தெளிவான அச்சுப் பதிப்பு, அழகிய வர்ணப்படங்கள் குறிப்பிட்ட பிரதிகளே கைவசம் உள்ளதால் உடனே விரையுங்கள்.

பூரணி புத்தகசாலை,
பிரதான வீதி,
கண்டி.

( V.P.P ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.)



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக